mnda
motor neurone disease association

1B

# பிற மொழிகளில் அல்லது வடிவங்களில் உடல்நலத் தகவல்கள்

**மோட்டார் நியூரான் நோய் அல்லது கென்னடிஸ் நோயுடைய அல்லது அவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தகவல்**

ஆங்கிலம் உங்களுடைய முதன்மை மொழியாக இல்லாதிருந்தால் அல்லது நீங்கள் பார்வைக் குறைபாடுடையவராக இருந்தால், மோட்டார் நியூரான் நோய் அல்லது கென்னடிஸ் நோய் பற்றிய தகவல்களையும், கிடைக்கப்பெறும் ஆதரவின் வகையையும் அணுகுவது சிரமமாக இருக்கலாம்.

இதர மொழிகளிலோ அல்லது பிரெய்லி, பெரிய அச்சு அல்லது ஒலியம் முதலான மாற்று வடிவங்களிலோ துல்லியமானத் தகவலை எவ்வாறு கண்டறிவது என்பது பற்றி இந்தத் தகவல் தாள் விளக்குகிறது.

இந்த உள்ளடக்கத்தில் இப்பின்வரும் பிரிவுகள் அடங்கும்:

**1: இதர மொழிகளில் நான் எவ்வாறு தகவல் பெறுவது?**

**2: பிரெய்லி, பெரிய அச்சு அல்லது பிற வடிவங்களில் நான் தகவலைப் பெறமுடியுமா?**

**3: வேறு எவையெல்லாம் எனக்கு உதவக்கூடும்?**

**4: எதிர்காலங்களில் MND அசோசியேஷன் எனக்கு எவ்விதமாக ஆதரவு தர முடியும்?**

**5: இன்னும் கூடுதலானவற்றை நான் எவ்வாறு கண்டறிவது?**

இந்த அடையாளக் குறி **எங்களது இதர வெளியீடுகளை** சிறப்பித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இவற்றை எவ்வாறு அணுகுவது என்பதை அறிய, இந்தத் தாளின் இறுதியில் இருக்கும் *மேலதிகத் தகவல்* என்பதைப் பார்க்கவும்.

இந்த அடையாளக் குறி MND நோயுடையவர்கள் அல்லது அந்நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் சொல்லும் **மேற்கோள்களை** சிறப்பித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

MND அசோசியேஷன் நம்பத்தகுந்த உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு தகவல்களைத் தயாரிக்கக் கூடியவர்கள் என்று சான்றிடப்பட்டுள்ளது.

**www.england.nhs.uk/tis**

சிகிச்சைகள் மற்றும் பராமரிப்புகள் குறித்து முடிவெடுக்கும் போது எப்போதுமே உங்கள் உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்புக் குழுவிடம் ஆலோசனைப் பெறுங்கள். நியமசந்திப்புகளின் போது உதவுவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளரை அவர்களால் ஏற்பாடு செய்து கொடுக்க முடியும்.

இது மூலத்தகவலின் மொழிபெயர்க்கப்பட்ட பதிவு என்பதை கவனத்தில் கொள்க. MND அசோசியேஷன் நற்பெயருடைய மொழிபெயர்ப்பு சேவைகளையே பயன்படுத்துகிறது. ஆனால் மொழிபெயர்ப்பில் ஏற்படும் எந்தப் பிழைகளுக்கும் அது பொறுப்பேற்காது. மேலதிகத தகவல்களை மொழிபெயர்ப்பது சாத்தியமாகலாம். ஆனால் இது ஒரு வரையறுக்கப்பட்ட சேவையாகும். விவரங்களுக்கு எங்கள் MND கனெக்ட் உதவிமையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்:

தொலைபேசி: **0808 802 6262**

மின்னஞ்சல்: mndconnect@mndassociation.org

## 1: இதர மொழிகளில் நான் எவ்வாறு தகவல் பெறுவது?

### MND அசோசியேஷனிடமிருந்து

தேர்வுசெய்யப்பட்ட ஒரு மொழியில் உங்களுக்கு எங்கள் உதவி தேவைப்பட்டால் எங்கள் MND கனெக்ட் உதவிமையத்தைத் தொடர்புகொள்ளுங்கள். உங்கள் தேவைகளை உதவிமையக் குழுவினர் புரிந்துகொள்வதற்கு முதலில் ஆங்கிலம் பேசக்கூடிய ஒரு நபர் உங்களுக்கு உதவிபுரியத் தேவைப்படலாம். எனினும், அதன் பின்னரே உங்களுக்காக மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய ஒரு மொழிபெயர்த்து உரைப்பவருடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்த இயலும்.

**MND கனெக்ட்**

தொலைபேசி: 0808 802 6262

மின்னஞ்சல்: mndconnect@mndassociation.org

எங்கள் மூல வெளியீடான *ஆன் இண்ட்ரடொக்ஷன் டு மோட்டார் நியூரோன் டிசீஸ்*-ஐ பல்வேறு மொழிகளல் நாங்கள் வழங்குகிறோம். நோய் பற்றிய இந்த மீள்பார்வையில் இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து முழுமையும் கிடைக்கபெறும் ஆதரவு வகைகள் பற்றிய விவரங்களும் அடங்கும்.

உங்களுக்கு கென்னடிஸ் நோய் இருந்து தகவல் தாள் 2B - *கென்னடிஸ் டிசீஸ்* வேறொரு மொழியில் தேவைப்பட்டால், உதவிக்கு MND கனெக்டைத் தொடர்பு கொள்ளவும்.

அந்தத் தாள் மட்டுமல்லாமல், இப்பின்வரும் தகவல் தாள்களையும் நாங்கள் இதர மொழிகளில் வழங்குகிறோம்:

- 7A – *விழுங்குவதில் ஏற்படும் சிரமங்கள்*
- 7B – *குழாய் வழி உணவளித்தல்*
- 8A – *சுவாசப் பிரச்சனைகளுக்கான ஆதரவு*
- 8B– *மோட்டார் நியூரான் நோயிற்கான (MND) செயற்கை சுவாசம்*

மொழிபெயர்க்கப்பட்ட எங்கள் வெளியீடுகளை இங்கு பதிவிறக்கம் செய்து கொள்ளவும்: **www.mndassociation.org/languages** அல்லது MND கனெக்ட்டிடமிருந்து

அச்சுப் பிரதிக்கு ஆர்டர் செய்து கொள்ளுங்கள். நற்பெயருடைய மொழிபெயர்ப்புச் சேவைகளையே நாங்கள் பயன்படுத்துகிறோம். ஆனாலும் மொழிபெயர்ப்பில் ஏற்படும் எந்தப் பிழைகளுக்கும் பொறுப்பேற்க முடியாது என்பதை கவனத்தில் கொள்க.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு உருப்படிக்கும், நாங்கள் ஏற்கெனவே வழங்கிக்கொண்டிருக்கும் மொழிகள் அல்லாத வேறொரு மொழியில் உங்களுக்குத் தேவைப்பட்டால் MND கனெக்ட்டுக்குத் தெரியப்படுத்தவும். சிகிச்சை அல்லது பராமரிப்பு பற்றி நீங்கள் ஒரு முக்கிய முடிவெடுப்பதற்கு உதவும் வகையில் மற்றொரு தகவல் தாள் அல்லது ஒரு பெரும் கையேட்டிலிருந்து ஒரு பகுதியைக் கூட எங்களால் மொழிபெயர்க்க இயலக்கூடும்.

*"சிகிச்சை பற்றிய விவாதங்களில் நான் ஈடுபடவும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் வாதிடுவதற்கும் கூட உங்கள் தகவல் உதவியது."*

## உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு நியமசந்திப்புகளில்

சிகிச்சை மற்றும் பராமரிப்பு பற்றி முடிவு செய்யும்போது, உங்களுக்கு ஆதரவாக இருக்கும் உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்புத் தொழில் வல்லுநர்களுடன் தேர்வுகள் குறித்து ஆலோசிக்க வேண்டியது முக்கியமாகும். அவர்கள் உங்கள் மொழியைப் பேசாவிட்டால் அது கடினமானதாக ஆகிவிடும். எனினும், இத்தகைய உரையாடல்களை மக்கள் புரிந்துகொள்ள உதவுவதற்கு, உடல்நலப் பராமரிப்புகளை வழங்குநர்கள் போதியளவு மாற்றங்களைச் செய்யவேண்டும்.

நியமசந்திப்புகளில், குறிப்பாக மருத்துவ நியமசந்திப்புகளில் உதவுவதற்கு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடுச் செய்ய அவர்களால் இயலக்கூடும். அநேக பொது மருத்துவச் சிகிச்சை மையங்களும், மருத்துவமனைகளும் வழக்கமான சேவையாக மொழிமாற்றுச் சேவைகளை வழங்குகின்றன. ஆனால் மற்றவர்கள் வேண்டுகோளின் பேரில் மட்டுமே வழங்குவார்கள்.

மொழிச் சிக்கல்கள் காரணமாக உங்கள் மருத்துவர் உங்கள் சிக்கல்களை எப்போதுமே புரிந்து கொள்வதில்லை என நீங்கள் எண்ணினால், உங்கள் நியமசந்திப்பின் போது ஒரு மொழிபெயர்ப்பாளரை உடன் இருப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படி உங்கள் பொது மருத்துவச் சிகிச்சை மையத்தை கேட்கவும். நீங்கள் இதை முன்னரே சொல்லி வைத்திருக்கவேண்டும். அப்போதுதான் இதற்கான ஏற்பாட்டைச் செய்யமுடியும். ஆண் அல்லது பெண் மொழிபெயர்ப்பாளர்களில் யார் வேண்டும் என்பது உங்களுக்கு

முக்கயமானதாக இருந்தால் அதையும் அவர்களிடம் தெரியபடுத்தவும்.

பயிற்சிபெற்ற மொழிபெயர்பாளர்களை வழங்குவது உடல்நலச் சேவையின் சட்டப்பூர்வமான பொறுப்பாக இருந்தாலும் கூட, உங்களுக்காக குடும்ப உறுப்பினர் ஒருவர் மொழி மாற்றம் செய்வதற்கு நீங்கள் விருப்பம் கொள்ளலாம். உங்கள் விருப்பங்கள் மதிக்கப்படும். எழுத்துவடிவிலான தகவல் உங்கள் பொது மருத்துவர் அல்லது மருத்துவமனையால் வழங்கப்பட்டிருந்தால் இதையும் கூட உங்கள் முதன்மை மொழியில் கோரலாம்.

நீங்கள் இங்கிலாந்து அல்லது வேல்ஸில் சமூகப் பராமரிப்பு மதிப்பாய்வை மேற்கொண்டிருந்தீர்கள் என்றால், உங்கள் உள்ளாட்சி அமைப்பிடம் மொழிபெயர்த்து உரைப்பவர்கள் பற்றி கேளுங்கள். வட அயர்லாந்தில் உங்கள் பகுதிசார் உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு அறக்கட்டளையைக் கேளுங்கள். உங்கள் மதிப்பாய்வு நியாயமானதாக இருப்பதையும், உங்கள் தேவைகளை எதிர்கொள்வதையும் உறுதி செய்வதற்கு பெரும்பாலும் அவர்கள் இதனை ஏற்பாடு செய்ய முயலுவார்கள்.

நீங்கள் ஸ்காட்லாண்டில் வசித்து வந்தால், மேலதிக வழிகாட்டுதலுக்கு MND ஸ்காட்லாண்டை நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பலாம். தொடர்பு விவரங்களுக்கு இந்தத் தாளின் இறுதியில் இருக்கும் *மேலதிக விவரங்கள்*-ஐப் பார்க்கவும்.

## பிற நிறுவனங்கள் மற்றும் இணையதளங்களிலிருந்து

இணையதளங்களில் இருக்கும் தானியங்கு மொழிபெயர்ப்புகள் சில நேரங்களில் உதவிகரமாக இருக்கும். ஆனால் துல்லியமாக இருக்காது மற்றும் தவறாக வழிநடத்தக்கூடும். எனினும், சில நிறுவனங்கள் பல்வேறு மொழிகளில் தகவல்களை வழங்குகின்றன. அவர்களுடைய இணையதளங்களைப் பார்க்கவும் அல்லது உங்களுக்காக ஒரு நிறுவனத்தத் தொடர்புகொள்ளுமாறு யாரையாவது கேட்கவும்.

## 2: பிரெய்லி, பெரிய அச்சு அல்லது பிற வடிவங்களில் நான் தகவலைப் பெறமுடியுமா?

### MND அசோசியேஷனிடமிருந்து

எங்கள் தகவல்கள் பற்றிய வழிகாட்டுதலுக்கு மற்றும் கிடைக்கபெறும் வடிவங்களுக்கு எங்கள் உதவிமையமான MND கனெக்ட்டைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: 0808 802 6262

மின்னஞ்சல்: mndconnect@mndassociation.org

பின்வருவனவற்றை அணுக உங்களுக்கு அவர்கள் உதவலாம்:

**பிரெய்லி:**
எங்களின் மொழிபெயர்க்கப்பட்ட தொகுப்புகளைப் போன்று எங்கள் தகவல் தாள்களின் அல்லது கையேடுகளின் பகுதிகளுக்கான நகல்களை நீங்கள் பிரெய்லியில் கோரலாம். நற்பேருடைய பிரெய்லி சேவைகளையே நாங்கள் பயன்படுத்துகிறோம். ஆனால் தயாரிப்பில் ஏற்படும் எந்தவொரு பிழைக்கும் பொறுப்பேற்க மாட்டோம் என்பதை கவனத்தில் கொள்க.

**பெரிய அச்சு:**
எங்களுடைய சிறு அட்டைகள் மற்றும் சிறு புத்தகங்கள் தவிர்த்து, எங்கள் தகவல்கள் அனைத்திலும் குறைந்தபட்சம் 12pt எழுத்துருவே பயன்படுத்தப்படுகிறது. மேலும் அவற்றை ஆன்லைனில் அணுகும்போது பார்வைக்குரிய அளவை நீங்கள் அதிகரித்துக் கொள்ளவும் முடியும்.

பின்வரும் உருப்படிகள் பெரிய அச்சில் தயாரிக்கப்பட்டுள்ளன (16pt அல்லது அதற்கும் கூடுதல்)

- *ஆன் இண்ட்ரடொக்ஷன் டு மோட்டார் நியூரோன் டிசீஸ் (MND)*
- *ஆன் ஈசி ரீட் கைட் டு மோட்டார் நியூரோன் டிசீஸ் (MND)*

**ஒலியம்:**

*ஆன் இண்ட்ரடொக்ஷன் டு மோட்டார் நியூரோன் டிசீஸ் (MND)* ஆங்கிலத்தில் ஓர் ஒலிப்

பதிவாக கிடைக்கிறது. இதை நீங்கள் சவுண்ட் கிளௌடில் இங்கு அணுகலாம்:

https://soundcloud.com/mndassoc/mnd-audiobook

2019 ஆம் ஆண்டு, எங்கள் தொகுப்புகளின் இன்னும் அதிகப் பதிவுகளைக் கிடைக்கச் செய்வோம்.

**மின்னணு வாசிப்பு:**

எங்களுடைய தகவல் தாள்கள் மற்றும் பல்வேறு இதரத் தொகுப்புகளுக்கு, 2019 இல் நாங்கள் ஒரு மின்னணு வாசிப்பு வடிவத்தை அறிமுகப்படுத்துவோம். இந்த வடிவத்தை ஸ்மார்ட் போன்கள், டாப்லெட்கள் அல்லது லாப்டாப்களில் எளிதாக படிக்க முடியும், இதில் நீங்கள் உரையின் அளவை அதிகரிக்கும் போது உரையின் தொடர்ச்சி, பக்கத்திற்கு பொருந்தும் வகையில் தன்னிச்சையாக மாறும்.

## உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு நியமசந்திப்புகளில்

பொது மருத்துவச் சிகிச்சை நிலையங்களால், உடல்நலச் சேவைகளால் அல்லது சமூகப் பராமரிப்பு மதிப்பாய்வுகளால் உருவாகும் தகவல்கள் பிரெய்லி, பெரிய அச்சு அல்லது இதர வடிவங்களில் கூட கிடைக்கப் பெறலாம்.

தகவலை படித்து பொருந்துவதற்கு உங்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த வகையான ஊனமாக இருந்தாலும் உங்கள் தேவைகளைத் தெரிவிக்கவும். இந்தச் சூழ்நிலையில், உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்புச் சேவைகள் வழங்கும் தீர்மானம்-செய்யும் தகல்களை உங்களால் அணுகவும், புரிந்துகொள்ளவும் முடிகிறது என்பதை உறுதிசெய்வதற்கு பொதுவாக அவர்களுக்கு பராமரிப்புக் கடமை இருக்கிறது.

இந்தப் பராமரிப்புக் கடமை எவ்வாறு முறைப்படுத்துகிறது என்பது பற்றி பின்வரும் ஆதாரங்கள் ஆங்கிலத்தில் விவரிக்கின்றன:

**இங்கிலாந்துக்கு**

இங்கு *ஆக்சிசபிள் இன்ஃபேர்மேஷன் ஸ்டாண்டர்ட்* பார்க்கவும்:

www.england.nhs.uk/ourwork/accessibleinfo

**வேல்ஸுக்கு**

*ஆல் வேல்ஸ் ஸ்டாண்டர்ட்ஸ் ஃபார் கம்யூனிகேஷன் அண்ட் இன்ஃபேர்மேஷன் ஃபார் பீப்பிள் வித் சென்சரி லாஸ்* பார்க்கவும்.

இது ஆங்கிலம் மற்றும் வேல்ஷ் என இரு மொழிகளிலும் இங்கு கிடைக்கிறது:
**gov.wales/topics/health/publications/health/guidance/standards/?lang=en**

### வட அயர்லாந்துக்கு

இங்கு *மேக்கிங் கம்யூனிகேஷன் ஆக்சிசபிள் ஃபார் ஆல் - எ கைட் ஃபார் ஹெல்த் அண்ட் சோஷியல் கேர் (HSC) ஸ்டாஃப்* பார்க்கவும்:
**www.belfasttrust.hscni.net/pdf/making_communication_accessible_to_all.pdf**

## 3: வேறு எவையெல்லாம் எனக்கு உதவக் கூடும்?

### பேச்சு மற்றும் தொடர்பாடல் மதிப்பாய்வு

MND, பேசுவது அல்லது உடலசைவைப் பயன்படுத்துவது மற்றும் முகபாவம் செய்வதை மிகவும் சிரமமுடையதாக ஆக்கி, பேச்சு மற்றும் தொடர்பாடலை பாதிப்புக்குள்ளாக்கலாம் . கென்னடிஸ் நோய், நீங்கள் பேசும் முறையையும் கூட பாதிப்புக்குள்ளாக்கலாம்.

உங்களுக்குத் தொந்தரவுகள் ஏற்பட ஆரம்பித்தால், ஒரு மதிப்பாய்வுக்காக பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையாளரிடம் பரிந்துரைக்கும்படி உங்கள் மருத்துவரைக் கேளுங்கள். அவர்கள் சிகிச்சை மற்றும் தொடர்பாடல் கருவிகள் பற்றி அறிவுறுத்தலாம். இந்தக் கருவிகள் படங்கள் மற்றும் உரை அட்டைகள் போன்ற எளிய உருப்படிகள் முதல் கணினி மென்பொருளிடமிருந்து விவரமான உதவி பெறுவது வரையில் உள்ளன.

குரல் சேமிப்பு (banking) மற்றும் செய்தி சேமிப்பு மீது நீங்கள் வழிகாட்டலைக் கோரலாம். இதன்மூலம், சொற்றொடர்களைப் பேசுவதற்காக, கணினிச் சாதனங்கள் மூலம் பதிவுசெய்த உங்கள் குரலை நீங்கள் பயன்படுத்தலாம்.

MND உடன் பேச்சு மற்றும் தொடர்பாடல் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு இவற்றைப் பார்க்கவும்:

- பிரிவு 8: *ஸ்பீச் அண்ட் கம்யூனிகேஷன்* எங்களுடைய *லிவிங் வித் மோட்டார் நியூரோன் டிசீஸ்* கையேட்டிலிருந்து.
- தகவல் தாள் 7C - *ஸ்பீச் அண்ட் கம்யூனிகேஷன் சப்போர்ட்*
- தகவல் தாள் 7D - *வாய்ஸ் பேங்கிங்*

## எழுத்துப்பூர்வமான குறிப்புகளை வழங்குதல்

உங்கள் பேச்சு பாதிப்புக்கு உள்ளானால் அல்லது உங்களால் ஆங்கிலம் பேச முடியாவிட்டால், உங்கள் தேவைகளை மற்றவர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்கு முன்னரே எழுதப்பட்ட குறிப்புகளை வழங்குவது உதவிகரமாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் உதவும் வகையில் இந்தக் குறிப்புகளை உங்களுடைய விருப்பமொழி மற்றும் ஆங்கிலம் என இரு மொழியிலும் வைத்துக்கொள்ள நீங்கள் விரும்பலாம். உறவினர, நண்பர் அல்லது ஒரு மொழிபெயர்ப்பாளரை உங்களுக்கு உதவுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

பின்வரும் சூழல்களில் இது போன்ற குறிப்புகள் பயனுள்ளதாக இருக்கும்:

- நியமசந்திப்புகளில் கலந்துகொள்ளும்போது
- பயணிக்கும்போது அல்லது உங்களின் தினசரி செயல்பாடுகளை மேற்கொள்ளும்போது
- பொது நிகழ்வுகளில்.

பின்வரும் இரு உரைத் துண்டுகள் பயனுள்ளதாக இருக்கும்:

**எனக்கு மோட்டார் நியூரோன் டிசீஸ்/கென்னடிஸ் டிசீஸ் இருப்பதால் தொடர்பாடுவது எனக்குச் சிரமமாக இருக்கிறது. நான் இந்த மொழியிலும் பேசுவேன்:** (இங்கு உங்கள் விருப்ப மொழியின் பெயரை உள்ளிடவும்).

**உங்களால் என் மொழி பேச முடியாமல் இருந்தும் என்னுடன் தொடர்பாட வேண்டிய தேவை இருந்தால், என்னுடைய பராமரிப்பாளர்/உறவினர்/மருத்துவர் உதவக்கூடும். தொடர்பு கொள்ள:** (தொடர்பு விவரங்களை இங்குச் சேர்க்கவும்).

இதுதான் ஆங்கிலத்தில் இருக்கும் அந்த இரு உரைத் துண்டுகளுக்கான வடிவுரு. இது, உங்கள் தேவைகளை ஆங்கிலம் படிப்பவர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்கானது. பொருந்தும் வகையில் MND க்கு ஒன்றும், கென்னடிஸ் நோய்க்கு ஒன்றுமாக கொடுக்கப்பட்டுள்ளது. வெறுமையாக இருக்கும் இடத்தில் உங்கள் மொழியின் பெயரையும் தொடர்பு விவரங்களையும் சேர்க்கவும். இந்தத் தாளைப் பயன்படுத்திக் கொள்ளவும் அல்லது ஒரு குறிப்புப் புத்தகத்தில் நகல் செய்து கொள்ளவும்.

மோட்டார் நியூரோன் நோய்க்கு:

**I find it difficult to communicate because I have motor neurone disease. I also speak Tamil.**

**If you cannot speak my language and need to communicate with me, my carer/relative/doctor can help. Please contact:**

*தேர்ந்தெடுத்த தொடர்பின் விவரங்களை இங்குச் சேர்க்கவும்:*

கென்னடிஸ் நோய்க்கு:

**I find it difficult to communicate because I have Kennedy's disease. I also speak Tamil.**

**If you cannot speak my language and need to communicate with me, my carer/relative/doctor can help. Please contact:**

*தேர்ந்தெடுத்த தொடர்பின் விவரங்களை இங்குச் சேர்க்கவும்:*

### ஈஸி ரீட் (Easy Read)

எங்கள் வெளியீடான *ஆன் ஈஸி ரீட் கைட் டு மோட்டார் நியூரோன் டிசீஸ்,* பின்வரும் நிலைகளில் உதவிகரமாக இருக்கும்:

- நீங்கள் எளிய உரையை ஆங்கிலத்தில் படிக்க விரும்பினால்
- உங்களுக்கு பெரிய அச்சு மற்றும் சிறிய வாக்கியங்களில் தேவைப்பட்டால்
- உங்களுக்கு கற்றல் சிரமங்கள் இருந்தால் அல்லது அவ்வாறு இருக்கும் ஒருவரை உங்களுக்குத் தெரிந்திருந்தால்.

*ஈஸி ரீட் கைட்* பதிவிறக்கம் செய்வதற்கு இங்கு *கைட்ஸ்* தேர்ந்தெடுக்கவும்: **www.mndassociation.org/careinfo** அல்லது எங்கள் MND கனெக்ட் உதவிமையத்திலிருந்து அச்சுப்பிரதியை ஆர்டர் செய்து பெற்றுக் கொள்ளலாம் (தொடர்பு விவரங்களுக்கு தாளின் இறுதியில் பார்க்கவும்).

## 4: எதிர்காலங்களில் MND அசோசியேஷன் எனக்கு எவ்விதமாக ஆதரவு தர முடியும்?

இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்தில் MND நோயுள்ள அல்லது அதனால் பாதிப்படைந்த ஒவ்வொருவரின் வாழ்வையும் மேம்படுத்துவதற்காக எங்கள் அறக்கட்டளை அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அதே போன்று அறிகுறிகளைக் கொண்டிருக்கும் கென்னடிஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது நோய் கொண்டிருக்கும் மக்களுக்கும் நாங்கள் ஆதரவு தருகிறோம்.

பராமரிப்பு மற்றும் ஆதரவுகள் உங்களுக்கு எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் மக்களுக்கு வெவ்வேறு விருப்பங்கள், சூழல்கள் மற்றும் நம்பிக்கைகள் இருப்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். உங்களுக்கென குறிப்பிட்ட உதவி எதுவும் தேவை இருந்தால் எங்கள் சேவைக் குழுவிடம் தெரியபடுத்தவும். நாங்கள் உங்கள் மொழியைப் பேசாமல் இருக்கலாம், அதனால் உங்கள் சார்பாக எங்களைத் தொடர்பு கொள்வதற்கு உங்களுக்கு யாராவது ஒருவர் தேவைப்படலாம்.

பின்வருபவை உள்ளிட்ட எங்கள் சேவைகளை, அவை கிடைக்கப்பெறுவதைப் பொறுத்து எங்கள் MND கனெக்ட் உதவிமையம் (தொடர்பு விவரங்களுக்கு தாளின் இறுதியைப் பார்க்கவும்) , உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம்:

- தன்னார்வக் கூட்டமைப்பின் வருகையாளர்கள், இவர்கள் தொலைபேசி,

மின்னஞ்சல் அல்லது வாய்ப்புள்ள இடங்களில் வீட்டிற்கு வருகைத் தருவதன் மூலம் தகவல் மற்றும் ஆதரவினை வழங்குவார்கள்

- பகுதிக் கிளைகள் அல்லது குழுக்கள், இங்கு நீங்கள் MND ஆல் பாதிக்கப்பட்ட மற்றவர்களைச் சந்திக்கலாம்
- பிராந்திய பராமரிப்பு வளர்ச்சி ஆலோசகர்கள், இவர்கள் பகுதிச்சார் உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு சேவைகளைக் கட்டுப்படுத்த உதவுவார்கள்
- எங்கள் ஆதரவுச் சேவைகள் குழு, உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு சேவைகளால் வழங்க முடியாத நிலையில், இவர்களால் ஆதரவு உதவித் தொகையை அல்லது சில குறிப்பிட்ட சாதனங்களின் உருப்படிகளை கடனாகவும் வழங்க இயலும் (பெரும்பாலான நிலைகளில் உங்கள் தேவைகளைப் பற்றிய மதிப்பாய்வினைத் தொடர்ந்து உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள் மூலமாக இந்தக் கோரிக்கைகள் வரவேண்டும்)
- பகுதி நிதியளிக்கப்பட்ட MND பராமரிப்பு மையங்கள் மற்றும் கட்டமைப்புகள், சிறப்பு உதவிகள் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புகளை வழங்குகின்றன (பிராந்திய நரம்பியல்சார் சேவைகள் மூலமும் வழங்கப்படுகிறது)
- எங்கள் இணையதளம் மற்றும் தகவல் தொகுப்புகள்: **www.mndassociation.org**
- எங்கள் ஆன்லைன் பொதுமன்றம்: **http://forum.mndassociation.org** MND ஆல் பாதிக்கப்பட்ட மற்றவர்களுடன் தங்கள் அனுபவங்களையும் ஆதரவினையும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு பாதுகாப்பான இடத்தை இது வழங்குகிறது (இது ஆங்கிலத்தில் இருக்கிறது, பொதுமன்ற பதிவுகளை எழுதவும் படிக்கவும் உதவுவதற்கு உங்களுக்கு யாராவது ஒருவர் தேவைப்படலாம்)
- உறுப்புரிமை, MND நோயுடையவர்கள் அல்லது கென்னடிஸ் நோயுடன் இருப்பவர்கள் அல்லது அவர்கள் துணைவர்கள், கூட்டாளிகள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு இது இலவசமானது (எங்கள் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையும் இதில் அடங்கும்).

## 5: இன்னும் கூடுதலானவற்றை நான் எவ்வாறு கண்டறிவது?

### பயனுள்ள நிறுவனங்கள்

இப்பின்வரும் எந்தவொரு நிறுவனத்தையும் நாங்கள் கட்டாயமாக ஆதரிக்கச் சொல்லவில்லை. ஆனால் மேலதிக தகவல்களுக்காக உங்கள் தேடலைத் துவக்க உதவும் வகையில் இவற்றைச் சேர்த்திருக்கிறோம். அவர்கள் உங்கள் மொழியைப்

பேசவில்லையென்றால், உங்கள் சார்பாக வேறு யாரையாவது அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளவேண்டும்.

அச்சுக்குச் செல்லும் நேரம் வரையில் தொடர்பு விவரங்கள் சரியானதாக இருந்தது. ஆனால் இரு சீராய்வுகளுக்கிடையே அவை மாறுபடலாம். ஒரு நிறுவனத்தைக் கண்டறிவதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், எங்களுடைய MND கனெக்ட் தொலைபேசி உதவிமையத்தை (விவரங்களுக்கு இந்த தாளின் இறுதியைப் பார்க்கவும்) தொடர்பு கொள்ளவும்.

## அட்வைஸ் நவ் (Advice now)

உரிமைகள் மற்றும் சட்டப் பிரச்சனைகள் பற்றிய ஆன்லைன் தகவல்.

இணையதளம்: **www.advicenow.org.uk**

## சிடிசன்ஸ் அட்வைஸ் (Citizens Advice)

**சட்டம், பணம் மற்றும் இதர சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவும் இலவச, இரகசியமான ஆலோசனையை வழங்குகிறது. பகுதிசார் கிளைகளுக்கு இணையதளத்தில் தேடவும்.**

தொலைபேசி: 03444 111 444 (இங்கிலாந்து, அல்லது உங்கள் பகுதிசார் சிடிசன்ஸ் அட்வைஸ் பியூரோவைத் தொடர்பு கொள்ளவும்)
0344 477 2020 (வேல்ஸ்)

இணையதளம்: **www.citizensadvice.org.uk (இங்கிலாந்து)**
**www.citizensadvice.org.uk/wales (வேல்ஸ்)**
**www.citizensadvice.org.uk/nireland (வடக்கு அயர்லாந்து)**

## டிஸ்எபிலிட்டி ஆக்ஷன் (Disability Action)

ஊனமுற்றவர்களின் உரிமைகளுக்காகப் பணிசெய்யும் வட அயர்லாந்து அறக்கட்டளை.

தொலைபேசி: 028 9029 7880
மின்னஞ்சல்: hq@disabilityaction.org
இணையதளம்: **www.disabilityaction.org**

### டிஸ்எபிலிட்டி லா சர்வீஸ் (Disability Law Service)

ஊனத்திற்கான சட்டம் குறித்த உதவி.

தொலைபேசி: 020 7791 9800

மின்னஞ்சல்: advice@dls.org.uk

இணையதளம்: **www.dls.org.uk**

### GOV.UK

இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் கிடைக்கும் உதவிகள் மற்றும் ஆதாயங்கள் பற்றிய அரசாங்கத்தின் ஆன்லைன் தகவல்.

இணையதளம்: **www.gov.uk**

### NHS சாய்சஸ் (NHS Choices)

ஆண்டின் 365 நாளும், நாளின் 24 நேரமும் உடல்நலம், ஆலோசனை மற்றும் தகவல்களுக்கு.

தொலைபேசி: அவசரநிலைகளுக்கு 111, ஆனால் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் சில பகுதிகளில் அவசர நிலையற்ற மருத்துவ ஆலோசனை

இணையதளம்: **www.nhs.uk**

### NHS டைரக்ட் வேல்ஸ் (NHS Direct Wales)

இது NHS 111 ஐ போன்றதே, ஆனால் வேல்ஸ் பகுதிக்கு மட்டும்.

தொலைபேசி: 0845 4647 அல்லது உங்கள் பகுதியில் கிடைக்குமாயின் 111

இணையதளம்: **www.nhsdirect.wales.nhs.uk**

### ஹெல்த் அண்ட் சோஷியல் கேர் நார்தன் அயர்லாண்ட் (Health and Social Care Northern Ireland) (NHS நார்தன் அயர்லாண்ட்)

வட அயர்லாந்தில் இருக்கும் உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்புச் சேவைகள் பற்றிய ஆன்லைன் தகவல்.

மின்னஞ்சல்: இணையதள தொடர்புகள் பக்கத்தின் வாயிலாக

இணையதளம்: **www.hscni.net**

## NI டைரக்ட் (NI Direct)

வட அயர்லாந்தில் இருக்கும் உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்புகள் பற்றிய அரசுத் தகவல்

மின்னஞ்சல்: இணையதள தொடர்புகள் பக்கத்தின் வாயிலாக

இணையதளம்: **www.nidirect.gov.uk**

## மொழிபெயர்ப்புச் சேவைகள்

மொழிபெயர்ப்புச் சேவைகள் அதிகச் செலவுடையாதாக இருக்கலாம். நீங்கள் மொழிபெயர்ப்பை வாங்குவது குறித்து பரிசீலித்தால், உங்கள் மருத்துவரின் சிகிச்சை மையம், உள்ளாட்சி அமைப்பு அல்லது வடக்கு அயர்லாந்துக்கான உங்கள் உடல்நலம் மற்றும் சமூகப் பராமரிப்பு அறக்கட்டளையிடம் கேட்கவும். அவர்கள் பயன்படுத்தும் விருப்புக்குரிய வழங்குநர்களைக் கொண்டிருக்கலாம்.

### குறிப்புதவிகள்

இந்தத் தகவல்களுடன் உதவி புரிவதற்கு பயன்படுத்தப்பட்ட குறிப்புதவிகள் கோரிக்கையின் பேரில் இங்கு கிடைக்கப்பெறும்:

மின்னஞ்சல்: infofeedback@mndassociation.org

அல்லது இந்த முகவரிக்கு எழுதவும்:
Information feedback, MND Association, PO Box 246, Northampton NN1 2PR

### நன்றிகள்

இந்தத் தகவல்களுடன் தங்களது மதிப்புமிக்க வழிகாட்டுதலை வழங்கிய இவர்களுக்கு நன்றி:

ரூத் கிளியூ, MND நெட்வொர்க் முன்னனி ஒருங்கிணைப்பாளர், மோரிஸ்டன் மருத்துவமனை, ஸ்வான்ஸீ, வேல்ஸ்
லெஸ்லே ஜான்ஸ்டன், ஆலோசனை மற்றும் தகவல் அதிகாரி, கேரர்ஸ் நார்தன் அயர்லாண்ட்

## மேலதிகத் தகவல்

பல்வேறு தலைப்புகளில் வெளியீடுகளையும் தகவல் தாள்களையும் நாங்கள் வழங்குகின்றோம்.

பெரும்பாலான எங்கள் வெளியீடுகளை பின்வரும் எங்கள் இணையதளத்திலிருந்து நீங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்: **www.mndassociation.org/publications** அல்லது MND கனெக்ட் தொலைபேசி உதவி மையத்தில் அச்சுப் பிரதிக்கு ஆர்டர் கொடுத்துப் பெறலாம். தொலைபேசி உதவிக்குழு எங்கள் தகவல்கள் பற்றிய கேள்விகளுக்கு பதிலளிப்பார்கள், உங்கள் மொழித் தேவைகளைப் பற்றி கலந்தாலோசிப்பார்கள், எங்களுடைய சேவைகள் மற்றும் இதர ஆதரவுகளுக்கு உங்களை வழிநடத்துவார்கள். அவர்கள் உங்கள் மொழியில் பேசவில்லையென்றால், உங்கள் சார்பாக வேறு யாரையாவது தொடர்பு கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

Helplines STANDARD

**MND கனெக்ட்**

தொலைபேசி: 0808 802 6262

மின்னஞ்சல்: mndconnect@mndassociation.org

MND Association, PO Box 246, Northampton NN1 2PR

**MND அசோசியேஷன் இணையதளம் மற்றும் ஆன்லைன் பொதுமன்றம்**

இணையதளம்: **www.mndassociation.org**

ஆன்லைன் பொதுமன்றம்: **http://forum.mndassociation.org** அல்லது இணையதளம் வாயிலாக

| | |
|---|---|
| கடைசி சீராய்வு: | 11/18 |
| அடுத்த சீராய்வு: | 11/21 |
| பதிப்பு: | 1 |

பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை எண் 294354
கம்பெனி லிமிடெட் பை காரண்டி எண் 2007023
© MND அசோசியேஷன் 2015